கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ இரண்டாம் அரையாண்டு பொது கலைமாணித் தேர்வு

2013/2014 (August/September 2015)

# OEC 2223 Environmental and Natural Resource Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1) அ) சூழல் பொருளியலின் முக்கியத்துவத்தையும், அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இயற்கையின் மீதான மானிடத்தங்கியிருத்தலில் சூழல் நிர்ணயவாதத்தின் செல்வாக்கினை விமர்சனரீதியாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

2) அ) வெளிவாரி விளைவுகள் எவ்வாறு சந்தைத்தோல்விக்கு அடிப்படையாக அமைகின்றது என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ) புறவிளைவுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதனை பொருத்தமான உதாரணங்களைக் கையாண்டு ஆராய்க.

(13 புள்ளிகள்)

3) அ) வளமுகாமைத்துவத்தில் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ) சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் ஒரு நாட்டின் அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கை வகுப்பாக்கங்களை ஆராய்க.

(13 புள்ளிகள்)

4) அ) சனத்தொகைப்பெருக்கம் எவ்வாறு வளநெருக்கடிக்குக் காரணமாக அமையும் என்பதனை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) நீர் மாசடைதலின் பொருளாதாரத் தாக்கங்களை மதிப்பிடுக.

(13 புள்ளிகள்)

5) அ) மீள்புதுப்பிக்கப்படக்கூடிய (Renewable) மற்றும் மீளப்புதுப்பிக்கப்பட முடியாத (Non Renewable) வளங்களினுடைய வேறுபாட்டைக் குறிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ) சிறந்த வளப்பங்கீட்டில் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குகள் மற்றும் தகுதி விதிகளை ஆராய்க.

(13 புள்ளிகள்)

6) "அண்மைக்கால உலகளாவியரீதியான வளநெருக்கடியானது சர்வதேச முரண்பாட்டிற்கு அடிப்படையாக அமைகின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை நாடுகளை உதாரணம் காட்டி ஆராய்க.

(25 புள்ளிகள்)